

# காற்றுள்ளவரை . . .

"உள்ளங்கள் அழுதாலும்
உதடுகளாவது சிரிக்கட்டும்"



தொகுப்பு

ரா. கலைமோகன் (அர்ஜுன்)
திம்புலயூர் - பத்தனை



# காற்றுள்ளவரை...

"உள்ளங்கள் அழுதாலும்
உதடுகளாவது சிரிக்கட்டும்"

தொகுப்பு

ரா. கலைமோகன் (அர்ஜுன்)
திம்புலயூர் - பத்தனை

# தாய்...



கருவின் ஒலியை
கணவன் மூலம் பெற்று
காற்றின் ஒலியை
விழியின் மூலம் பெற்று

பத்து திங்கள் மடியில் வைத்த மாது
சுமையாக நினைக்காமல்
சுகமாக நினைத்து சுமந்து

வரமாக பெற்றெடுத்து
சுரமான தாலாட்டு பாடி
சுவையான பால் ஊட்டி
அன்போடு அமுதம் ஊட்டி

பருவத்தின் மூலம்
உருவம் மாறினாலும்
மாறாத பாசத்தினை கொண்ட
தாய்க்கு ஈடாக
இந்த மானிடத்தில்
ஏதாவது உண்டா ?

# யுத்தம்

ஜாதி மத பேதம் இன்றி
ஜனநாயகமே வேதம் என்று வாழ்ந்தால்
எங்கிருந்து வரும் யுத்தம்
எதில் இருந்து வரும் வெடி சத்தம் !



ஏட்டிலும் பாட்டிலும்
எல்லையற்ற பேச்சில் மட்டும்
தான் ஒற்றுமை
ஏற்ற தாழ்வு பார்த்து எண்ணற்ற
மக்களை கொன்று
இன்னும் ஏன் உன் மனதில் வேற்றுமை !

நீ தினமும் நடத்தும்
துப்பாக்கி வாதத்தால்
துர்பாக்கிய நிலையை அடைவாய்
பேச்சு வார்த்தையை எடுத்தால்
மூச்சு நிற்கும் வரை தொடரும்
முடிவு எப்போது பிறக்குமோ
அப்போதுதான் இலங்கையின் விடிவு !



# பிரிவு

பள்ளியில் வைத்து
நண்பனை பிரிந்து
நட்புக்கு புள்ளி வைக்க
முடியாமல் அழுதேன்.



பாதி வழியில்
பாசத்தின் விகாரமான
நண்பனை இழந்து
மறுமுறை அழுதேன்.

இன்று மூன்றாவது முறை
அழுகின்றேன்
நட்பில் தொடங்கி
காதலாய் மலர்ந்து
கசப்பாய் மாறிய
உன்னை எண்ணி.

# என் துர்பாக்கியம் . . .

நிலவின் அழகு
அருகில் இருந்தால் புரியாது !
நெற்கதிரின் அழகு
அருவடையின் பின் தொடராது !

ஆனால் என் தேவதையின்
அழகோ - ஆயிரம் ஆண்டுகள்
சென்றாலும் ஓழியாது !
அந்த ஆதவன் மறைந்தாலும்
அவளின் நினைவுகள் என்னை
விட்டு அழியாது !




அவளை வர்ணிக்கவோ எனக்கு
மொழியேது ?

என் தேவதையை மனம் முடிக்க
கிடைத்தால் பாக்கியம்
என் மனதினை முறியடித்து
சென்றால் அது
என் துர்பாக்கியம் !

# மரணம்

பிறந்தவுடன் பாலை கொடுத்து
இறக்கும் முன்னே நாளை குறித்து
இன்பத்தினை அதிகமாய் கொடுத்து
இடையில் துன்பத்தினை ஏற்படுத்தி



உறவுகளை வரவழைத்து
உருகுலைந்து கதரவைத்து
உயிரை பறித்து கொண்டு
உடலை எறிய வைத்து
அந்த இயமன் குளிர்காய்கிறான்

இதனை புரியாத மனித மனம்
எல்லையற்ற பாசத்தினை வைத்து
எல்லோருக்கும் பிரிவு உண்டு - என
அறிய வைத்த யமனை குறை சாற்றுகின்றன




பிறந்தவுடன் தொட்டில் தாலாட்டு
இறந்தவுடன் பெட்டியில் ஒப்பாரி
இது தான் மனித வாழ்வு !

# விதவை கோலம்

என் கண்கள் பார்க்க
பார்வைக்கு விருந்தாய்
பட்டு துணியுடுத்தி பலர் பார்த்து
ரசிக்க - வாசலில் போட்டால்
பூக்கோலம்.


இன்று திருமணம் முடித்து
கணவனை இழந்து கண்ணீருடன்
வெள்ளை சேலை அணிந்து
நெற்றியில் பொட்டும் இன்றி
நிலளின் பட்டும் இன்றி
வெக்கத்துடனும், துக்கதுடனும்
பலர் பார்த்து சிரிக்க பாதையில்
போகின்றாள் விதவை கோலமாய்

அவளின் விதி இதுவென்றால்
மனைவியை இழந்த ஆணுக்கு
மட்டும் என்ன நீதி ?




# சம்மதம் சொல்லி விடு . . .

முல்லை பூவின் மடியில்
வெள்ளை காகித வடிவில்
சொல்ல முடியாமல்
தவித்த நான்
என் செல்ல கிளிக்கு
சிவந்த ரோஜாவுடன்
சின்ன கவிதையாக
காதல் கடிதம் வரைகிறேன்.




உன் மனதில் வைத்து
வர்ணம் பூசி
உன்னை மணக்க போகும்
காதலனுடன் ஒரு வார்த்தை பேசி

என் உன்னதமான காதலுக்கு
உன் சிவந்த உதடுகளால்
சம்மதம் சொல்லிவிடு



# சொல்லி விடு

காதல் உறவு கொண்டு
கலையின் அருகில் இருந்த
கயல் மீனே !



என் கைகளை விட்டு
கொஞ்சம் கொஞ்சமாய்
நலுவிச் செல்கிறாயே !

என்னை கவிதை எழுத வைத்த
கலைமானே - என்
மனதினை விட்டு
கொஞ்சம் கொஞ்சமாய்
விலகி போகிறாயே !

என்னை அறியாமல்
நான் செய்த பிழைகள்
உன் மனதினை பாதித்தால்
சொல்லி விடு திருத்திக் கொள்கிறேன்
தள்ளி செல்வதாக நினைத்து
அள்ளி தந்த உன்
மனதினை திருப்பிக் கேட்காதே !

# இறுதியில் நீ மட்டும் தனியாய்

யுத்த வாசலில் நிற்கும் இன்றைய
இளைஞர்களுக்கு - இந்த புத்தாண்டு
என்ன புதுசா? அந்த புத்தாடை
என்ன பெரிசா?

யதார்த்த வாதிகள் உள்ள இந்த
இலங்கையில் எங்கிருந்து வரும் அந்த
சமாதானம்
சாக்கடையிலா? இல்லை பூக்கடையிலா?

சமாதானம் என்ற சொல் தேர்தல்
காலத்திற்கு முன் பேசப்பட்டது - இப்பொழுது
அதுவும் பள்ளத்தில் வீசப்பட்டது

குனிந்து துணிந்து வேலை செய்ய பயன்படும்
இன்றைய கோலைகளை அகற்றி
ஆங்காங்கே நடைபெறும் கொடுமைகளை
நிறுத்தி கொண்டு வா சமாதானத்தை

இந்த புத்தாண்டில் உனக்கு சிலை
வைத்து ரசிப்பார்கள் - இல்லை என்றால்
எஞ்சிய இளைஞர்கள் இறப்பதை கண்டு
இறத்த ஆறில் நீராடு
இறுதியில் நீ மட்டும் தனியாய்

# நீ என் அருகில் வந்தால் . . .



நீ என் அருகில் வந்தால்
ஆகாயம் சருகாகும்
அமுதமும் சுரமாகும்
பகலும் இரவாகும்
என் பருவம் வேறுபடும்

நீ என் அருகில் நின்றால்
பாலைவனமும் ஆலயமாகும்
என் பருவகாற்று என் மீது பாயும்
உன் பாசவளையும் என்னை சுடும்

நீ என் அருகில் சென்றால்
நாட்கள் வருடமாகும்
உன் சொற்கள் புனிதமாகும்
நரகமும் சொர்க்கமாகும்

நீ என் அருகில் இருந்தால்
நீல் வானில் மழை பெய்யும்
நடு கடலின் அலை மோதும்
நட்சத்திரம் நிலவாகும்

நீ என் அருகில் வந்தால்
என் உதடுகளில் உச்சரிக்கும் வார்த்தைகள்
கவிதையாகும்
கலையின் உள்ளமும் நிறைவாகும்

# நீயும் இதனை உணர்வாய் ...

பத்து மாசம் மடியின் தொட்டிகட்டி
மனதில் தாலாட்டு பாடினாள்
கருவில் உள்ள தன் குழந்தை மட்டும்
கேட்க.

பாதி காலம் பாட்டின் தொட்டிகட்டி
பாலூட்டி சத்தமிட்டு தாலாட்டி
முத்தம் இட்டு காத்து வந்தாள்

மீதி காலம் மனதின் மனக்கோட்டைக்
கட்டி அழகு பார்த்தாள் - ஆனால்
அப் பிள்ளையோ
மனக்கோட்டையை மண்கோட்டையாய்
மாற்றி இன்று கண்ட மங்கையே பெரிதென
மணமேடை வரை சென்றான்

என்றாவது அந்த தாய் வடிக்கும் கண்ணீர்மழை
இம் மண்கோட்டையை கரைய செய்யும்
கால போக்கில் நீயும் இதனை உணர்வாய் !

# உன்னை
# நான் வெறுத்ததில்லை

நீண்ட நாட்களாய் நம் சந்திப்பு
நிகழவில்லை - ஆகையால்
நிம்மதியும் இப்போது இல்லை

என் காதலுக்கு நீ சம்மதம்
சொன்ன நாள் முதல்
என் மனமும் என்னிடம் இல்லை

நம் பெற்றோர் நம் காதலுக்கு தடையான
போதும் என் மனம் எப்போதுமே
என்னை வெறுப்பதில்லை

காரணத்தை உன்னிடம் கேட்க முடியாது
காரணம் நான் தானே என்காதலை
முதலில் சொன்னேன்

நான் சொன்ன வார்த்தை சொர்க்கத்திற்கு
அழைத்து சென்றது
இப்போது துக்கத்துடன் பூமியில்
நடமாடுகின்றது

என்னை வெற்றி நடை போடவைத்ததும்
இந்த காதல் தான்
இப்போது உன்னை காணாது
நடை பிணமாக்கியதும்
இந்த காதல் தான்

நான் உன்னை குறைசொல்லவில்லை
இந்த காதலைத் தான்
குறை சொல்கின்றேன்

# இன்று புரிந்து என்ன பண்ண

அனுதாபமே இல்லாத உன்னிடம்
அன்பை எதிர்பார்த்ததும்
என் தவறுதான்
கருணையே இல்லாத உன்னிடம்
காதலை எதிர்பார்த்ததும்
என் தவறுதான்

என்ன பண்ண கண்களை பார்த்து
காதலித்தேன்
இப்போது காதலை வெறுத்து
கவிதை எழுதுகிறேன்

அன்று கண்முன்னே பூத்து நின்றதால்
காதலை வளர்த்து விட்டேன்
பூத்த பூவின் அடி துவாரம் சேர்த்து
என்று இன்று தானே புரிந்தது
இன்று புரிந்து என்ன பண்ண
அன்று புரியவில்லையே !

# வாலிபத்தால் சுட்ட தீ...




உயிரே உனக்காக - என்னால்
தாஜ்மகால் கட்ட முடியாவிட்டாலும்
உள்ளத்தால் நாம் இருவரும்
வசிக்க சிறு குடிசை
கட்டி வைத்துள்ளேன்


என்னிடம் குணத்தை எதிர்பார்த்தால்
குடிதனம் வருவாய்
பணத்தை எதிர்பார்த்தால்
குறைதான் சொல்வாய்

அன்பே என் மனக் குடிசையின்
தீபம் ஏற்றாவிட்டாலும் பரவாயில்லை
தினம் தினம் தீயிட்டுக் கொல்லாதே

வாலிபத்தால் சுட்ட தீயே
இன்னும் ஆறவில்லை
வார்த்தையால் நீ இடப்போகும்
தீ எப்போ ஆறப்போகிறது ?



# மயக்கியது மல்லிகை அல்ல . . .



என் மனதினை நனைத்தது
சென்றது ஒரு மல்லிகை
அதனை நினைத்து பின்னே
சென்றது என் மனத்திரை

மல்லிகையோ என் முன்னே நடந்து
சென்ற மங்கையின் கூந்தலை
அடைந்து விட்டது

எனக்கு சொந்தமான மல்லிகை
இன்னொரு பெண் அணிவதால்
அப்போதே என் பயணத்தினை
நிறுத்திவிட்டேன்

ஆனாலும் மல்லிகை மேல் கொண்ட
பாசத்தினை மறக்க முடியவில்லை
மனதினை தேற்றிக் கொண்டு
சில நாட்களை கழித்தேன்

ஏக்கங்களோ என்னை விட்டு
போகவில்லை
அப்போது உணர்ந்தேன்
என்னை மயக்கிய மல்லிகை அல்ல
மல்லிகையை சூடிச் சென்ற
மங்கை என்று !

# கண்ணீர் மழை

அன்பே நிலவில் தெரியும்
மர்மம் நீ
நீரில் மிதக்கும் செந்தாமரை நீ

நீ என் நிலையான உறவு என்பதால்
தான் - நீண்ட நாளாய் உன்
கவிதை தொடர்கிறது

ஞாபகம் இருக்கிறதா நம் காதல்
ஆரம்பித்ததே அந்த கவிதையில் தானே
காதலின் அழகே இந்த
கவிதைதான்



என் கவிதை வரிகள் உனக்கு
பிடிக்காமல் இருக்கலாம்
செல்லம் என்மேல் கொண்ட
அந்த காதல் உன்னதமானது

அதுதான் உன் உள்ளத்தின்
மிதக்கும் இளையவனின்
இதமான கவிதை துளிகள்

இந்த கவிதை துளியை ஆகாயத்தில்
பறக்க வைத்து ரசிக்காதே
என் கண்ணீர் மழை உன்னை
கரையச்செய்யும்

# என் தவறுகள் தான் . . .

அழிந்து போகும் அலையைதானே
ரசித்தேன் - நிலையான
கடலை ரசிக்கவில்லையே நான்

மறைந்து போகும் மேகத்தினை
தானே உலாவந்தேன்
மாறாமல் இருக்கும் வானை இல்லையே


கரைந்து போகும் பனித்துளியிடம்
தானே என் காதலை சொன்னேன்
உறைந்து போகும் இரத்தத்திடம்
நான் சொல்லவில்லையே

நான் மூன்றாம் பிறையைதானே
கவிதையாய் நினைத்தேன்
முழு நிலவை நினைக்கவில்லையே
எல்லாம் என் தவறுதான்
இதில் உன் தவறுகள்
எதுவுமில்லை




# மெதுவாய் சரிந்த காதல் . . .


அலைப்பாயும் வயதின் அழகு
மட்டும் தான் என் கண்ணுக்கு தெரிந்தது
என் மனம் அலைமோதும்
நேரத்தில் தான் அவளின்
அழகு முகம் தெரிந்தது




நான் ஆசைப்பட்ட போதே
அவள் மனம் எனக்கு கிடைத்தது
அவளால் என் மனம் அணைக்கப்பட்டதால்
மூன்று ஆண்டுகள் நிலைத்தது

அவளே என்னை வெறுத்தபோது
என் மனமோ மெதுவாய் சரிந்தது
ஆனால் இப்போது அழும் போதுதான்
அவள் நிரந்தரம் இல்லை என்று
புரிந்தது





# குடித்தனம் வர விரும்புகின்றேன்



பார்வை என்ற ஈட்டியால்
என்னை குத்தி விட்டு
போர்வை என்ற பொக்கிசத்தால்
உன் இதயத்தை
பூட்டி வைக்கின்றாயே !

நீ இமைகளை திறந்து
என்னை நோக்கும் போது
நான் உன் இதயத்தை
திறந்து பார்க்க கூடாதா?
இல்லை என்றால் உன் இதயவீட்டு
திறப்புவிழாவில் - நான்
கலந்துக் கொள்ளக் கூடாதா?

அன்பே உன் இதயத்தில்
அடிதளம் போட
நான் விரும்பவில்லை
குடித்தனம் வர விரும்புகின்றேன்
உன் விருப்பத்துடன்

# என் ஆதிக்கம் நிலைக்குமா?

நீ என் அருகில் இல்லாததால்
உருகிப் போகிறேன்
அன்பற்ற உன் காதலால்
அனுதினம் கருகிப்போகிறேன்

இலகு மனம் உனக்கு இருந்தால்
என் நிலைக்கு இறங்கி வருவாய்
அழகு முகம் கொண்டதால்
ஆட்டி வைத்துதான் ரசிப்பாய்

நிரந்தரமற்ற நினைப்பால்
நிலைக் குலைந்து போகிறேன்
நிரந்தரமான அன்பை மட்டும்
உன்னிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன்

காதலில் பெண் ஆதிக்கம்
தான் அதிகம்
என் ஆதிக்கம் நிலைக்குமா?
நீடிக்குமா???


# என் தேவதை நீதான் . . .

சிலையாக நீ இருந்தால்
கலையின் பார்வை உன் மேல் விழாது
நீயோ கண்ணாடியையே ஊடுரைக்கும்
வைரமாய் உள்ளாயே !

வர்ணம் கொண்ட சித்திரமாய்
நீ இருந்தால் என் எண்ணம்
உன்னை வட்டம் இடாது
நீயோ வாலிபனை வசப்படுத்தும்
தேவதையாய் உள்ளாயே !

இந்த தேசத்தின் உன்னை போன்ற
ஒரு பெண்ணை கண்டதில்லை
உன்னை கண்ட நாள் முதல்
என் மனம் உன்னை விட்டு
எங்கும் சென்றதில்லை
என்னை எனக்கே அறிமுகம்
செய்த காதலை உயிர் போனாலும்
நான் விட போவதில்லை.

# கை கூடாமல் போனால் வேதனை . . .



உரக்கத்தின் நடுவில்
உன் சிந்தனை
உள்ளத்தில் தினமும்
உனக்கு ஆராதனை

காதலை காட்டி
அந்த கடவுள் வைக்கிறான்
பல சோதனை
இதனையெல்லாம் மீறி
கல்யாணம் முடிந்தால் சாதனை
கை கூடாமல் போனால் வேதனை



# என் காதல் எல்லை மீறுமா?

விண்ணிலே அவன் வரைந்த
ஓவியம்
கண்ணீராய் மாறி மண்ணில் விழுகின்றது

கண்ணுக்குள் நான் வரைந்த
ஓவியம்
காதலாய் மாறி உன் மனதினை
தொடுகின்றது

தொடு வானமான என் காதல்
உன் மனதினை கொள்ளை
கொள்ளுமா ?

தொல்லை என்று நீ நினைத்தால்
என் காதல்
எல்லை மீறுமா?

காதலால் நான் வரைந்த ஓவியம்
கண்ணீராய் மாறாமல் பாதுகாத்துக்கொள்

# உண்மை காதல் இது

காதல் உறவு கொண்டவன்
தினமும் விதியோடு போராடுகின்றான்
கண்களால் காதலைக் கற்று தந்தவள்
இன்று சதியோடு விளையாடுகிறான்

அவள் சாதித்து விடுவாள் ஏன் என்றால்
அவளின் மடியில் சாய்ந்து
உறங்கத் தானே ஆசைப்பட்டேன்
என்னை அணைப்பது போல்
அனல் மூட்டி குளிர் காய்வாள்

நான் கருகி சாம்பல் ஆனாலும்
அவளை என்னை விட்டு
போக விட மாற்றாள்
என் உண்மை காதலை
சாக விட மாட்டேன்



# விம்பமற்ற காதல்


ஆண்களே . . !

விபச்சாரியுடன் உடல் உறவு கொண்டாலும்
பரவாயில்லை

விம்பம் அற்ற காதல் உறவினை
கொள்ள வேண்டாம்

என் காதல் அனுபவத்தை
ஆண்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்
பெண் மான்களால் நாளை நீயும் கல்லறைக்கு
சென்று விட கூடாது என்ற
நல்ல எண்ணத்துடன்

ஒரு முறை தியானம் செய்துபார்
அமைதிக்கிட்டும்
ஒருத்திக்கு மனதினை தியாகம்
செய்துபார்
உன் சுதந்திரமே பறிபோகும்.



# நான் விஞ்ஞானி அல்ல . . .

அன்பே உன்னிடம் எதிர்பார்த்தேன்
ஆம் என்ற ஒரு வார்த்தையைதான்
அர்த்தமற்ற உன் மௌன வார்த்தையை
அல்ல !

நீ மனதில் பேசிக்கொண்டால்
இயந்திரம் கண்டுபிடித்து தெரிந்து
கொள்ள நான் ஒரு விஞ்ஞானி அல்ல !

இதயத்தை தந்து காதலை பகிர்ந்து
கொள்ள வந்த சாதாரண மனிதன்

மனித பிறப்பின் மகத்துவமே
இந்த காதல் தானே
இதற்குள் ஏன் மோதல்
மனதில் உள்ளதை சொல்லிவிடு
மறைப்பதால் உனக்கு என்ன பயன்.

# பொய் குற்றச்சாட்டு



குழந்தை தணமான
உன் சிரிப்பை பார்த்து
காதலித்தேன் - தினமும்
குழந்தையை போல
என்னை அழவைத்து ரசிக்கலாமா?

இருவரும் புரிந்து கொண்டு தானே
காதலித்தோம் என்னை விட்டு
பிரிந்து செல்ல நினைப்பது சரியா?
இல்லை என்றால் திட்டம் போட்டு
நீ செய்யும் சதியா?

காதல் உறவில் - நம்
இரு மனதும் சங்கமிக்கும் இடத்தில்
என் ரசனை - உன்
சிரிப்பாக இருக்கும் போது
உன் ரசனை மட்டும் என் மேல்
அழுப்பாக மாறிய காரணம் என்ன?
தனிமையில் இனிமையாய் இருக்கவா?

# என் காதல் பயணம் . . .

ஆயுள்கள் நீடிப்பது
ஆண்டவன் கையில் இல்லை
ஆண்களை அழகை காட்டி
மயக்கும் பெண்கள்
கையில் உள்ளது.

அவள் சம்மதித்தால் மனதில்
பேரின்பம்
என் காதலை அவமதித்தால்
பெருகிடும் துன்பம்

எனவே அழகிற்கு அடிமையாகுவதை
விட
அன்புள்ளங் கொண்டவள் ஒருவள்
இருப்பாள்
அவளை தேடுவது இனியது

தேடுதலில் முடிவில்
மனதினை ஆளும் தேவதையாய்
உதிர்ப்பாள்
அதுவரை தொடரும்
என் காதல் பயணம்



# விழிகள் வரையும் பாதை



என் விழிகள்
வரையும் பாதையினூடாக
என் மனதினை சந்திக்க
வரமாட்டாயா
என்ற ஏக்கத்துடன் வாழ்கிறேன்

கனவில் சரி ஒரு முறை
வந்து பார்த்து செல்
என் கண்ணீர் உன்னை வரவேற்கும்
காலம் சென்றவுடன்
காதல் மலர் - உன்
மனதில் பூக்கும்
அந்நாளை காண
உன் காதல் நாயகன்
காத்திருப்பேன்.

# இந்த உறவு புனிதமானது . . .

மஞ்சல் முகமே என் நெஞ்சம்
நிறைந்தவளாய் - என்
நினைவுகளில் உறைந்தவளாய்
நீ இருக்கின்றாய் - என்று
நிம்மதியாய் இருக்கேன்



நீ வான் மதியாய் மாறி
வாலிபனுடன் கல்யாண
ஊர்கோலம் தேரில் வருவாய்
இல்லையென்றால் எதிர்புகளை மீறி
கலையை காணநேரில் வருவாய்
என உன் வரவை எதிர்பார்க்கின்றேன்

என் வரவு எவ்வாறானாலும்
என்னை ஏற்க தயாராய்
உள்ளது இந்த உறவு





# துரும்பான மனம் . . .

என் மேல் கோபம் இருந்தால்
உன் கோபம் தீர ஏசி விடு
துரும்பான என் மனம் கோபிக்காது
தவறுகள் என்னுடையது என்றால்

மறுகனமே என்னோடு
பேசிவிடு - என் மனம்
உன்னுடையது என்றால்

யோசிக்காமல் எழுதிவிட்டேன்
இதற்கு உன்னை நான்
நேசிக்கவில்லை
என்று அர்த்தம் இல்லை.

# மை முடிந்தது . . .

என்ன செய்வது விதி
இதுதான் என்று அறியாமல்
உரிமையோடு விளையாட்டை
நான் ஆரம்பித்தேன்

எதிர்பாராத விபத்தால்
உள்ளங்களின் மனம் பாதிக்கப்பட்டு
என் மனதினை சரியவிட்டு
என் பக்கம் நியாயம் கேட்டால்
எவன் வருவான் எனக்காக வாதாட
நான் விதியோடு போராட

என்னுடன் துணைக்குவர
என் கவிதையை அழைத்தேன்
பேனையில் மை முடிந்தது
மிகுதியை கண்ணீரில் எழுதுகின்றேன்
எழுத்துக்கள் நனையாமல் இருந்தால் !



# நீ விரித்த வலையில் . . .

பெண்ணே நேற்று
என் இரு கண்கள் பார்க்க - இளம்
மொட்டாக இருந்த நீ
இன்று மலராய் மாறி
பட்டுடுத்தி மங்கையின்
வடிவில் நிற்கின்றாயே !



இது என்ன பிரம்மனின்
மகத்துவமா?
யமனின் மாயக்கலையா?
என்று எனக்கு புரியவில்லை
ஒன்று மற்றும் புரிகிறது
நீ விரித்த வலையில்
நான் சிக்கிக் கொண்டேன்
அது சிறையா?
நீ காதலை சொல்லும் முறையா?
பதில் உன்னிடத்தில்!

# உண்மைக்காக

ஜனநாயக நாட்டில்
மிருக வேட்டையை நிறுத்த
புதிய புதிய சட்டம் மறைமுகமாய்
மனித வேட்டையாட அனுதினம்
பல சதி திட்டம்

இதன் மத்தியிலும்
பாதையோரம் தினந்தோறும்
பாராட்டும் பட்டமும்

மக்கள் இட்ட மலர் மாலைக்கு
நன்றி கடனாய்
மலர் வலையத்தை திருப்பி தருகிறான்
அவனுக்கு இன்னும் எதற்கு
பாராட்டும், பட்டமும் - பரிதாப
சட்டமும்


இதனை உணர்ந்து புறப்படு மனிதா
சாக்கடையில் விழமுன்
பூக்கடையில் புதிய பேச்சுவார்த்தையை
ஆரம்பிப்போம்

# இன்னும் பாதி மயக்கம்

என்னவளே !
தனிமையில் மௌனமாய்
நீ பாடும் கானம்
இனிமையான புல்லாங்குழல்
இசைப்பது போல் இருந்தாலும்

என் இதயம் - உன்
வார்த்தைகளையே
கவிதை வரிகளாய் ஏற்கும்
உன் வார்த்தையை தேடி
என் இதயத்தில்
ஏதோ ஒரு ஏக்கம்

உன் பார்வை பட்டதால்
இன்னும் நான் பாதி மயக்கம்
இன்னும் ஏன் நீ பேச தயக்கம்



# காதல் தீ



மனதினை மாற்றி
கொள்ளும் போதே
மணமாலையை மாற்றி விட்டது
போல் நினைத்து
கனவும், கற்பனையும் வளர்த்தேன்

நீயோ! என் காதலுக்கு
மறுப்பு தெரிவித்த போது
பேச வார்த்தை இன்றி திகைத்தேன்
உன்மேல் அளவற்ற
அன்பு கொண்டதால்

இன்று உன் உருவத்தையும்
பருவத்தையும்
தொலைத்து விட்டு எனக்கு
நானே ஆறுதல் சொல்லிக் கொள்கிறேன்
ஆனாலும் உன்னை விட்டு
தள்ளி செல்ல - என்
மனம் இடம் கொடுக்கவில்லை.

# ஒருமுறை . . .

இமை என்ற போர்வையால் - என்னை
சிறைச் செய்து விட்டு
இதயம் என்ற கதவுகளை
திறக்க மறுப்பது ஏன்?




இளையவளின் கனவுகளை
களைக்க நினைப்பது ஏன்
ஏற்ற தாழ்வு பார்க்காமல்
இறங்கி வா என் நிலைக்கு
உறங்கிய உன் மன்னவன்
விழிக்கமுன்
கனவிலாவது வந்து ஒரு
முறை சிரித்திடுபெண்ணே !

## அதிசயங்கள் . . .

கலையை நேசிக்க வைத்த
உன் இரு கண்களும் காதலை யாசிக்க
வைத்த கொள்ளை கொள்ளும் உன் வெள்ளை
மனதும்
கனவில் யோசிக்க வைக்கும் உன்
அற்புத செயலும் என்னை மீண்டும் மீண்டும்
கவிதை எழுத தூண்டும்
உன் நினைவும்

தினம் தோறும் ரசிக்க தோன்றும்
உன் புன்னகையும்
பார்த்தவுடனே பசிக்க வைக்கும்
உன் சின்ன இடையும்
என்னை கண்டவுடன்
வேகமான உன் நடையும்

இன்னும் எத்தனையோ
உன்னில் நான் கண்ட அதிசயங்கள்
அத்தனையும் எழுத - இந்த
ஒரு நாள் போதாது



# நீ படிப்பாய் ...

நீ படிப்பாய் என
என் வழியில் ஒரு
காதல் கவிதை எழுதி
உன்னை உற்றுப்பார்க்கிறேன்

நீயோ! பார்த்தும்
படிக்காமல் செல்லுகிறாயே
ஏன் என்னை உனக்கு பிடிக்கவில்லையா?
இல்லை என்றால் - என்
காதலின் தூய்மை தான்
புரியவில்லையா?



என்றோ ஒருநாள்
என் கண்ணுக்குள் வரைந்த
கவிதையை படிக்க
உன் இதயம் துடிக்கும்
இந்நாளுக்காய் - உன் மன்னவன்
உறக்கம் இன்றி
உன் நினைவுகளுடன் பூமியில்



# நட்பு

காலம் இடும் விதையால் முளைத்து
கோலம் இடுவதை போல்
இரு மனதினையும் இணைத்து
பாசக் கயிற்றால் இரு மனதினையும்
அனைத்து நேசக் காற்றை வீசி
ஒளிவு மறைவு இன்றி பேசி
பருவத்தால் உருவம் இன்றி
உள்ளத்தால் உறவை கொண்டு

இரவினை நிறுத்தி
உறவினை நிலைநாட்ட
நினைக்கும்
ஒருவகை எடுகோள்
தானடா நட்பு





# உன் கண்கள்

மூன்றாம் பிறை போன்ற உன் நெற்றிக்கு கீழ்
பற்றி எரியும் தீயாய்
இரு கண்களை ஏன் படைத்தான்
இரவின் மூன்றாம் பிறையான நிலவுக்கு
குளிரும் என்றா?
இரக்கம் கொண்டு அழ உன்னிடம்
கண்ணீர் தான் உண்டா?

அப்படி என்ன உன் கண்களில் உள்ளது
என் கண்ணீருடன் கலந்த
கண்கள் ஏன் இன்னும் உன் கண்களை
தேடுது?

காரணமும் புரியவில்லை
என் கவிதை வரிகளும் முடியவில்லை
உனக்கு மட்டும் ஏன் இது புரியவில்லை?

# கற்பனையில் மட்டும்

என்னவளே . . !
அன்றொருநாள் சந்தித்தேன்
பள்ளியில்
பாவை உன் அழகால்
மயங்கி மனதில் நான்
போட்டேன் காதல் என்றபுள்ளி

இன்று அப் புள்ளியை
வட்டமாக மாற்றி
வாழ்க்கை தேரில்
உன்னை ஏற்றி
சக்கரமாய் மாறி
என் இரு தோல்களால்
உன்னை தாங்கி
ஊர்கோலம் வருகின்றேன்
கற்பனையில் மட்டும்



# நின்றுவிடும் என் மூச்சி

கண்கள் என்ற இரு வித்தாய்
முளைத்த காதல் என்ற பயிரே . . !
தினம் தினம் - உன்
கண்கள் உன்னை தேடுதடி உயிரே !

அழகே முளைத்த பயிருக்கு
தண்ணீர் ஊற்றாமல்
கண்ணீரை ஊற்றி
வளர்க்கின்றேன் என் காதலை
இன்னும் உன் மௌன பதில்களால்

அன்பே பேசி விடு
ஒரு வார்த்தை
இல்லை என்றால்
தொலைந்து விடும் என் வாழ்க்கை

உன் பேச்சிக் காற்று என்
செவிகளில் விழாவிட்டால்
நின்று விடும் என் மூச்சி காற்று.

# பாவியாகிய நானும் ஊமை



தென்றலுடன் பேச நினைத்தேன்
தென்றலின் மொழி தெரியவில்லை
தேகத்தில் பூத்திருந்த
தேவையுடன் பேச நினைத்தேன்

அவளின் விழிக்கு - என்
உருவம் தென்படாமல் போனது

ஆனாலும் அவளின் மொழி
மௌன மொழி என அறிந்து கொண்டேன்

பாவை அவள் பேசாததால்
பாவியாகிய நானும் ஊமை ஆகிவிட்டேன்

# சதி

காலத்தின் சூழ்ச்சியால்
கருவறையில் பிரம்மன்
எனக்கு போட்ட சதிகணக்கு

இன்று காதல் என்ற
பெயரில் - பெண்ணவள் ஒருவள்
வடிவில்
என்னை பின் தொடர்கின்றது
விதி என்ற விளக்கு

இதன் மத்தியில்
நீ எப்படி ஏற்றுவாய்
என் இதய வீட்டில்
குத்து விளக்கு !



# உதிர்ந்த மலர்

வெண்ணிலவை அழகு படுத்த
இரவு வந்து போகின்றது
பெண் நிலவை அழகு படுத்த
அனுதினம் காதல் உறவு
வந்து போகின்றது



உள்ளங்களை பறிமாற
நினைக்கும் போது - என்
உதடுகளின் வார்த்தை வர
மறுக்கின்றது - ஆனாலும்
இதயம் என்ற இல்லங்களில்
இன்னும் காதல்
மலர் உதிர்க்கின்றது

உதிர்ந்த மலர்
கருகிப்போவதும்
காதலாய் மலருவதும் உன் கையில்.

# எங்கிருந்து வரும் புதுக்கவிதை

என்னவளே உன் கரம் பற்ற வேண்டும்
என்னும் ஏக்கத்தின் ஒரு ஜீவன்
வாடுதம்மா என்னை வாட்ட வைத்தது
சூரிய ஒளி அல்ல
சுமையான நம் இடைவேளைதானம்மா

உன் தோள் சாய உன்னவன்
ஒருவன் இருக்க உள்ளத்தின் கலக்கம்
என்னம்மா

என் மேல் பற்றி கொண்டது
உன் கவர்ச்சி அல்ல
உன்னதமான உன் காதல் தானம்மா

மங்கையே உன் மடி சாய மன்னவன்
இங்கு மண்ணில் புதைந்து போனேன்
அன்பே புதைந்து போன என் வாழ்வை
புதுபிக்க என்னால் புது கவிதை எழுத
முடியாது

ஏன் என்றால் உன் புன்னகையை தான்
கவிதை என்பேன்
ஆனால் இப்போது உன் புன்னகையே
காணவில்லையே
இப்போது எங்கிருந்து வரும் புதுக்கவிதை

# என் விதி

அன்பே உனக்காய் கடிதங்கள் எழுதினேன்
தலைவிதி என்றால் - பரவாயில்லை
இப்பொழுது உன் பெயரின் கவிதைகளை
எழுதுகின்றேன் தலைவிதி என்று சொல்லிவிடாதே

ஏன் என்றால் என் கடிதம் நின்றது போல்
என் கவிதைகளும் நின்று விடும் என்ற பயம்
உன்னை தொல்லைபடுத்தும் கவிதைகளை
எழுதவில்லை
உன்னை சாந்தப்படுத்த கவிதைகளை எழுதினேன்

நீ எண்ணங்களை கொண்ட என் கடிதங்களை
தான் படிக்கவில்லை
என் இதய ஏக்கங்களை கொண்ட
கவிதைகளை சரி ஒருமுறை படி

கடிதத்திற்கு பின் இந்த கவிதைகளை
எழுதிதான் என் மனக்குறையை
நிறைவேற்றிக் கொள்கிறேன்
நிறைவான என் மனதினை நீ மீண்டும்
இருளாக்க நினைக்காதே - இறுதியில்
நீயும் இருட்டில் தான் இருக்கவேண்டும்

உலவன் மண்ணில் கொட்டும் வியர்வை
இந்த உலகினையே வாழ வைக்கின்றது
அதே உழவன் வியர்வைக்கு பதிலாய்
கண்ணீரை மண்ணில் வடித்தால்

இந்த உலகை கண்ணீர் கடலாய்
மாற்றி விடும்
அப்போது நீரிற்கு பதிலாய் கண்ணீரை
தான் குடிக்க வேண்டும்
உணவிற்கு பதிலாய் உழவன் மேய்க்கும்
அந்த உன்னதமான மாடுகளை தான்
உண்ண வேண்டும்

எனவே உழவன் உள்ளம் செழிப்பானால்
பூமியில் உள்ள பயிரும் செழிப்பாகும்
பூமியில் பயிர் செய்கைக்கே இடம்
இல்லாத போது - அந்த உழவன்
பாலை வனத்திலா பயிர் செய்வான்
பாலை வனத்தில் நீர் இல்லையே
உழவனின் கண்ணீர் மலையால்
காய்ந்து போகுமே !
அந்த உலகின் அனைத்து உயிரும்
மண்ணில் சாய்ந்து போகுமே
பயிர் செய்கைக்கே இடம் இல்லாத போது
மாய்ந்த உயிரை
ஆகாயத்தில் வைத்தா தகனம் செய்வாய்